# கண்டல் தாவர கதைகள்:
# மினுவும் மாய முனிவன் நண்டும்



கதை மற்றும் ஆக்கம் : மாபாசியா நிஜாம்தீன்

ஒரு காலத்தில் கண்டலூர் என்றோர் அழகிய தீவு இருந்தது .

இத்தீவு கண்டல் தாவரங்கள், பவளப்பாறைகள் மற்றும் மணல் மேடுகளால் சூழப்பட்டிருந்தது.

அங்கு ஏராளமான சிறிய மீன்கள், சிறிய நண்டுகள் மற்றும் சிறிய இறால்கள் நடனமாடி பாடி சந்தோசமாக வாழ்ந்து வந்தன.

இச்சிறு விலங்குகளுக்கு கிராமத்தில் மினு மற்றும் அவனது செல்லப்பிராணியான கடி என்ற குரங்குக்குட்டி ஆகிய உற்ற நண்பர்கள் இருந்தனர்.

மினு தனது நண்பர்கலாகிய சிறிய மீன், சிறிய நண்டு மற்றும் சிறிய இறாலை மிகவும் நேசித்தான்.

அவர்களுக்கு விடுமுறை நாட்களில் அடிக்கடி வந்துபோன நிறைய பறவை நண்பர்களும் இருந்தனர்.



ஒரு நாள் மினுவும் நண்பர்களும் கடலோரத்தில் மகிழ்ச்சியாக விளையாடிக்கொண்டிருந்த போது, கிராமத்திலிருந்து வந்த ஓர்  மரம் வெட்டி அனைத்து கண்டல் தாவரங்களை வெட்டத் தொடங்கினான்.

கண்டல் தாவரங்கள் வெட்டப்பட்டதால் மினுவின் நண்பர்கள் அழத் தொடங்கினர்.



அவர்கள் தங்கள் வீட்டை இழந்தார்கள், அருகிலிருந்த ஆழமான நீலக் கடலை தவிர அவர்களுக்கு வேறெங்கும் செல்ல முடியவில்லை.

ஆழமான நீலக் கடலுக்குள் செல்ல அவர்கள் மிகவும் பயந்தார்கள்.



ஆழமான நீலக் கடலில்
அலைகள் பெரிதாக இருந்தன.

ஆனால் வேறு வழியின்றி சிறிய
மீன், சிறிய நண்டு மற்றும்
சிறிய இறால் ஆகியவை
சோகமாக கடலுக்குள்
சென்றன.

அவர்களின் பறவை
நண்பர்களுக்கும் தங்குவதற்கு
ஒரு இடம் இன்றி வெளியேறின.

மினுவின் நண்பர்கள்
அனைவரும் வெகுதூரம்
செல்வதைப் பார்த்து மினு
உதவியின்றி சோகமாக அழுது
கொண்டிருந்தான்.

மினுவும் கடியும் தங்கள்
நண்பர்கள் இன்றி தனிமையை
உணர்ந்தனர்.



கடலிலிருந்த பெரிய அலை மினுவின் நண்பர்களான சிறிய மீன், சிறிய நண்டு மற்றும் சிறிய இறால் ஆகியவற்றை விரட்டியடித்ததற்காக கிராமவாசிகள் மீது மிகவும் கோபம் கொண்டது.

எனவே, பெரிய அலை கிராமத்திற்கு வந்து கிராமவாசிகளின் அனைத்து பொருட்களையும் கடலுக்குள் எடுத்துச் சென்றது.




ஒரு நாள் மினுவும் கடியும்  தனது நண்பர்களை நினைத்து கடற்கரையில் அழுதுகொண்டிருந்தனர் .

 திடீரென்று அவர்கள் முன்  அபூர்வமான மாய முனிவன் நண்டு தோன்றியது.

மாய முனிவன் நண்டு ஆழமான நீலக் கடலுக்குள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக தியானித்து ஞானம் நிரம்பப்பெற்றது.

மினுவிடம் மாய முனிவன் நண்டு அழுவதற்கான காரணத்தை கேட்டது.

மினு உடனே  “ஓ மாய முனிவன் நண்டே...என் நண்பர்கள் பெரிய நீலக் கடலில் தொலைந்துவிட்டார்கள்... தயவுசெய்து அவர்களைக் கண்டுபிடிக்க எனக்கு உதவி செய்யுங்கள்" என்று கேட்டான்.



மாய முனிவன் நண்டு புன்னகத்தது. நான் உன்னிடம்  ஒரு புதிரைக் கேட்பேன்... நீ அதற்கு பதிலைக் கண்டுபிடிக்க முடிந்தால் உன் நண்பர்களைக் காணலாம் ..” என்றது.

மினு புதிரை சொல்லுமாறு கேட்டான். உடனே மாய முனிவன் நண்டு "கடற்கரையின் தாயை மீட்டெடுத்தால் அனைத்து நன்மைகளும் பின்தொடரும், இக் கடற்கரையின் தாய் யார்?, கண்டு பிடி பார்ப்போம் என்றது.

மினு மிகவும் குழப்பமடைந்தான், அவனுக்கு பதில் தெரியவில்லை.

மினு கிராமத்திற்குச் சென்று ஒவ்வொருவரிடமும் புதிருக்குரிய பதிலை கேட்டான்.

அவர்கள் எவராலும்  பதிலை  கண்டுபிடிக்க முடியவில்லை... அவன் அருகிலுள்ள கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள  தனது நண்பர்கள் அனைவரிடமும் கேட்டான். யாருக்கும் பதில் தெரியவில்லை.

கடைசியாக மினு
அழுதுகொண்டே வீட்டிற்கு
வந்தான் , அவனுடைய  தாய்
மினுவிடம் “மகனே ஏன்
அழுகிறாய்?” என்று
கேட்டார்.

மினு தன் தாயிடம் நடந்த
எல்லாவற்றையும்
கூறினான்.

மினு  மாய முனிவன்
நண்டின் புதிரை தன்
தாயிடம் கூறினான்.

"கடற்கரையின் தாயை
மீட்டெடுத்தால் அனைத்து
நன்மைகளும்
பின்தொடரும், இக்
கடற்கரை தாய் யார்?" எனும்
புதிருக்கு தனக்கு  விடை
தெரியாது என்று கூறி
அழுதான்.



மினுவின் தாய் சிரித்துக் கொண்டே சொன்னார். பதில் தெரியாமல் இருப்பது பரவாயில்லை.

சில புதிர்களுக்கு பதில் யாருக்கும் தெரியாது. அனால் நீ எப்போதும் என்னுடன் மகிழ்ச்சியாக இருக்க முடியும். நான் உன்னை என்றும் போல் கவனித்துக்கொள்வேன். நான் உன்னை பாதுகாப்பாக வைத்திருப்பேன். என்று ஆறுதல் கூறினார்.

திடீரென்று, மினு மிகவும் மகிழ்ச்சியாக துள்ளிக்குதித்தான். அவன் தனது நண்பர்களான சிறிய மீன், சிறிய நண்டு ,சிறிய இறால், கண்டல் தாவரங்களுக்கு அருகில் நடனமாடி பாடுவதை நினைவு கூறினான்.
அவர்கள் கண்டல் வேர்களைச் சுற்றி மறைத்து ஒழிந்து , உணவு உண்டு மகிழுவதை பற்றி சிந்தித்தான். மினு அவன் தாயுடன் சந்தோசமாகவும் பாதுகாப்பாகவும் இருப்பது போல அவன் நண்பர்கள் கண்டல் தாவரங்களுடன் மிகவும் சந்தோசமாக அவனுக்கு ஞாபகம் வந்தது. உடனே மினுவுக்கு பதில் தெளிவானது.

“கண்டல் தாவரங்கள் ” என்பதே புதிருக்கான பதிலாகும் . அந்த மரங்கள் தான் கடற்கரையின் தாய். அத்தாவரங்கள் சிறிய மீன், சிறிய நண்டு மற்றும் சிறிய இறால் ஆகியவற்றை மிகவும் மகிழ்ச்சியாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருந்தன, மேலும் மினுவின் தாயைப் போலவே கண்டல் தாவரங்கள் அவனின் நண்பர்களுக்கு உணவையும் அரவணைப்பையும் வழங்கி வந்தன.

மினு விடையை மாய முனிவன் நண்டிடம் கூறினான். கண்டல் தாவரங்கள் என்பதே சரியான விடையாகும். அவை தான் கடற்கரையின் தாயாகும்.




உடனே மாய முனிவன் நண்டு தனது மந்திரத்தால் அழிந்துபோன கண்டல் காட்டினை முன்பிருந்ததை விட அழகாகவும் விசாலமாகவும் உருவாக்கியது.



சிறிய மீன், சிறிய நண்டு மற்றும் சிறிய இறால் ஆகியவை ஆழமான நீல கடலில் இருந்து நடனமாடி பாடிக்கொண்டே கண்டல் தாவரங்களை நோக்கி வந்தன.



பெரிய அலையும்  அவர்களுடன் வந்து கிராமத்திலிருந்து திருடப்பட்ட அனைத்து பொருட்களையும் திருப்பி அளித்தது.



கிராமவாசிகள் அனைவரும் ஒன்றிணைந்து அதிக கண்டல் தாவரங்களை நடுகை செய்யத் தொடங்கினர்.

அத்துடன் கண்டலூரின் அழகிய கடற்கரைகளைப் பாதுகாத்து வந்தனர்.

மினு அவனது நண்பர்கள் மற்றும் கிராமவாசிகள் அனைவரும் எப்போதும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தார்கள்.





# கண்டல் தாவர கதைகள்: மினுவும் மாய முனிவன் நண்டும்

கதை மற்றும் ஆக்கம் : மாபாசியா நிஜாம்தீன்

மின்னஞ்சல்: fathimamafaziya@gmail.com

© 2020 by Mafaziya Nijamdeen. This book is an open access publication distributed under the terms and conditions of the Creative Commons Attribution-NonCommercial-NoDerivatives 4.0 International (CC BY-NC-ND 4.0) (https://creativecommons.org/licenses/by-nc-nd/4.0/).